சார்பு நீதிமன்றம், பல்லடம்.

OS.No 150/2023

| | | |
|---|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | : | DW1 |
| பெயர் மற்றும் வயது | : | நல்லம்மாள் |
| கணவர் பெயர் | : | குழந்தைசாமி |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | பல்லடம் |
| மாவட்டம் | : | திருப்பூர் மாவட்டம். |

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் புதன்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது தரப்பு ஆவணங்களாக

1. 15.06.1968 செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு நோட்டரி சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ. 1 ஆகவும்
2. 05.03.1979 சீனிவாச ராவ் அவர்களின் உயில் சாசனம் அசல் பி.வா.சா.ஆ 2 ஆகவும்
3. சீனிவாச ராவ் இறப்பு சான்றிதழ் நோட்டரி சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ 3 ஆகவும்
4. 29.12.2024 வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு நோட்டரி சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ– 4 ஆகவும்
5. அசல் வழக்கு எண். 246/2012 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நோட்டரி சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ 5 ஆகவும்
6. செல்லம்மாள் இறப்பு சான்றிதழ் நோட்டரி சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ. 6 ஆகவும்
7. செல்லம்மாள் வாரிசு சான்றிதழ் நோட்டரி சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ. 7 ஆகவும்
8. பட்டா பி.வா.சா.ஆ 8 ஆகவும்

**(பி.வா.சா.ஆ 2 வாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆதியில் இந்த வழக்கில் எனது தாயார் பெயரில் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் மாதப்பூர் கிராமத்தில் உள்ளது.வழக்கு சொத்தின் காலை எண் தெரியுமா என்றால் 181 ஆகும். மேற்படி வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 14 ½ ஏக்கர் ஆகும். மேற்படி சாலை எங்கு உள்ளது என்றால் வடபுறத்தில் 9 ஏக்கரும் சாலையை அடுத்து தென்புறத்தில் 2 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி சாலை என நான் சொல்லியுள்ளது 14 ஏக்கர் நிலத்தில் தற்போது புதிதாக போடப்பட்ட சாலை என்றால் சரிதான். மேற்படி

வழக்கு சொத்திற்கு கிழபுறம் என்ன யாருடைய பூமி உள்ளது என்றால் மாகாளியம்மன் கோவில் உள்ளதாக கேள்விபட்டேன், எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கு சொத்திற்கு மேற்கு புறம் யாருடைய பூமி என்றால் கிருஷ்ணசாமி பூமி என்று சொன்னார்கள் அதுவும் நேரடியாக தெரியாது. மேற்படி 9 ஏக்கர் பூமி என சொல்லியுள்ள நிலையில் அதன் வடபுறத்தில் யாருடைய பூமி என்றால் எனக்கு தெரியாது. தென்புறத்தில் யாருடைய பூமி என்றால் ஏதோ மாதப்பூர் காரர் பூமி என்று சொன்னார்கள், ஆனால் யார் என்று தெரியாது.

2. நான் சீனிவாச ராவ் அவர்களை பார்த்துள்ளேனா என்றால் எனக்கு சீனிவாச ராவ் ஐயர் என்று சொன்னார்கள், நான் அவரை பார்த்துள்ளேன், வீட்டிற்கு வருவார். நான் அவரை பார்த்த போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 25 வயது இருக்கும். எனக்கு எவ்வாறு சீனிவாச ராவ் பழக்கம் என்றால் எனது அப்பாவும் சீனிவாச ராவ் அவர்களும் ராகவேந்திரா கோவிலுக்கு செல்வது வழக்கம் அதன் மூலம் எங்களது குடும்பத்தில் ரொம்ப பழக்கமாகிவிட்டார். அவ்வாறு சீனிவாச ராவ் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிய பழக்கத்தில் இருந்ததை காட்ட எந்த ஆதாரமும் இல்லை என்றால் எனக்கும் எனது அம்மாவிற்கும் நன்கு தெரியும் எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்தார் ஆனால் ஆவணம் எதுவும் இல்லை. மேற்படி சீனிவாச ராவ் எங்கு குடியிருந்தார் என்றால் பல்லடம் தபால் நிலைய வீதியில் குடியிருந்ததாக தெரியும். அது அவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நான் அவரது வீட்டிற்கு சென்றுள்ளேனோ என்றால் நான் சென்றதில்லை எனது தந்தை சென்றுள்ளார்.

3. மேற்படி வழக்கு பூமியில் என்ன விவசாயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சோளம் செய்யப்பட்டுள்ளது. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளதா என்றால் வெள்ளக்கோவிலில் உள்ளது. எனது சொந்த ஊர் எதுவென்றால் வெள்ளக்கோவில் அருகில் துாரம்பாடி ஓலப்பாளையம் கிராமம் ஆகும். நான் திருப்பூருக்கு எப்போது வந்தேன் என்றால் எனது மகனுக்கு 4 வயது இருந்த போது வந்தேன், எனது மகனுக்கு தற்போது 52 வயதாகிறது. எனது கணவர் என்ன தொழில்செய்து வந்தார் என்றால் வட்டி தொழில் செய்து வந்தார். நான் திருமணத்திற்கு பிறகு தான் திருப்பூர் வந்தேன் என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் தாயார் எனது திருமணத்திற்கு பிறகு வெள்ளகோவிலில்தான் இருநதார்கள் என்றால் வெள்ளக்கோவிலில் இருந்தார்கள், பிறகு அவர்களும் வந்துவிட்டார்கள். எனது தந்தைக்கு விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான். வெள்ளக்கோவிலில் விவசாயம் பார்த்து வந்தார் என்றால் சரிதான். வெள்ளக்கோவிலில் இன்னும் சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை, 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு அந்த சொத்துக்களை விற்று திருப்பூரில் இடம் வாங்கி வீடு கட்டியுள்ளோம். நான் திருப்பூரில் முதலில் எங்கு குடியிருந்தேன் என்றால் சாரிப் காலனியில் குடியிருந்தேன்.

4. சீனிவாச ராவ் அவர்களுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் திருமணம் ஆகி மனைவி இறந்துவிட்டார், ஆனால் குழந்தைகள் எதுவும் இல்லை, சொந்தபந்தமும்

யாரும் இல்லை. சீனிவாச ராவ் அவர்களின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சீனிவாச ராவ் அவர்கள் மனைவி பெயர் எப்போது காலமானார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் எனக்கு படித்து காண்பித்தார்கள். அந்த உயில் ஆவணத்தை வைத்து எனது தாயார் செல்லம்மாள் அசல் வழக்கு எண். 246/2012 ஆக திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி எனது தாயார் யாருக்கு எதிராக அந்த வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சஞ்சய் மற்றும் விஜயக்குமார் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார்.

5. இந்த வழக்கு சொத்திற்கான வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. எனது அம்மா தாக்கல் செய்திருந்த வழக்கு அதன் விவரங்கள் அனைத்தும் எனக்குஅப்போது தெரிந்து தான் நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கை நடத்தி ஏற்பாடு செய்தது எனது மகன் என்றால் சரிதான். மேற்படி சீனிவாச ராவ் எப்போது காலமானார் என்றால் 40 ஆண்டுகள் இருக்கும். மேற்படி சீனிவாச ராவ் எங்கு காலமானார் என்றால் அவருக்கு ஆஸ்துமா பிரச்சனை இருந்ததால் சரவணப்பட்டியில் ஒரு வீடு எடுத்து எனது தந்தையுடன் நாட்டு வைத்தியம் எடுத்து கொண்டார் அப்போது அங்கு காலமாகிவிட்டார். உயில் சாசனம் எப்போது எழுதப்பட்டது என்றால் சுமார் 50 ஆண்டுகள் இருக்கும். மேற்படி உயில் சாசனம் எங்குவைத்து எழுதப்பட்டது என்றால் பல்லடத்தில் எழுதியதாக சொன்னார்கள் அவ்வாறு எழுதி அவர் ஒரு பெட்டியில் வைத்திருந்தார் அவர் காலமான பிறகு எனது தந்தை அவரது வீட்டை காலி செய்து பொருட்களை கொண்டு வந்து அந்த பெட்டியில் இருந்து உயில் ஆவணத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார்.

6. மேற்படி சீனிவாச ராவை கடைசி காலம் வரை எனது தந்தை தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான். சீனிவாச ராவுக்கு இறப்பு சான்றிதழ் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழ் எப்போது வாங்கப்பட்டது என்றால் 30 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கியதாக சொன்னார்கள் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி உயிலில் சாட்சியாக கையொப்பம் செய்த நபர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான், அதில் ஒரு சாட்சி பழனிசாமி இறந்துவிட்டார். மேற்படி உயில் பத்திரத்தை தயாரித்த பத்திர எழுத்தரை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சீனிவாச ராவ் சரவணப்பட்டியில் இருந்தது யாருடைய வீடு என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு சொத்தின் பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் சீனிவாச ராவ் பெயரில் பட்டா இருந்தது. வாதியின் வழக்கு தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார். மேற்படி வழக்கு சொத்திற்கு வாதி பெயரில் நாகராஜ், ஜெயதீர்த்தா ஆகியோர் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் எங்களது உரிமையை மறுத்து ஆவணம் எழுதியுள்ளார்கள் ஆனால் எனது அம்மா பெயருக்கு தான் உயில் உள்ளது.

7. வாதி உட்பட சரஸ்வதி, ராஜலட்சுமி, சிவகாமி ஆகியோரை தவிர்த்து இதர நான்கு

பேருக்கும் மேற்சொன்ன நாகராஜ், ஜெயதீர்த்தா ஆகியோர் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வழக்கு சொத்தில் நெடுஞ்சாலைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்ட போது எனக்கோ எனது அம்மாவிற்கோ அறிவிப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. எனது அம்மா பெயருக்கு இதுவரை வழக்கு சொத்து தொடர்பாக பட்டா இல்லை என்றால் எனக்கு தெரியாது. 2012 ல் வழக்கு தாக்கல் செய்த போது வாதி பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மா தாக்கல் செய்திருந்த வழக்கின் தரப்பினர்களான சஞ்சய் மற்றும் விஜயக்குமார் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது அம்மா தாக்கல் செய்திருந்த வழக்கை அவர்கள் நடத்தினார்களா என்றால் இல்லை. எனது அம்மா மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அவர்களை பார்த்ததில்லை என்றால் சரிதான். அவர்கள் யார் என்றே தெரியாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அவர்கள் தான் இந்த வாதி சொல்லி மிரட்டியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

8. அந்த வழக்கு தாக்கல் செய்த போதே இந்த வாதி தான் அவர்கள் மூலம் பிரச்சனை செய்கிறார்கள் என தெரியும் என்றால் தெரியும், ஆனால் நான் அவர்களை பார்த்ததில்லை. மேற்படி அசல் வழக்கு எண். 246/2012 ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் எனது அம்மா தாக்கல் செய்திருந்த எதிர்வாதம் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், படித்து காண்பித்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் எனக்கு தெரியும் என்றால் படித்து காண்பித்தார்கள். எனது அம்மா தாக்கல் செய்திருந்த எதிர்வாதம் எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் எனது அம்மா தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண். 246/2012 ல் சீனிவாச ராவ் அவர்களை எனதுதந்தை தான் பார்த்துக்கொண்டார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்திலும் சீனிவாச ராவ் அவர்களை எனது தந்தை தான் பார்த்துக்கொண்டார் என குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் எனது தாயார் பார்த்துக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளது.

9. சீனிவாச ராவ் அவர்களுக்கு சொந்த ஊர் எதுவென்றால் கர்நாடகா பக்கம் என்று சொன்னார்கள் குறிப்பிட்டு தெரியாது. வழக்கு சொத்தில் கட்டிடம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சீனிவாச ராவ் அவர்களின் இறப்பு சான்றிதழ் நீதிமன்றம் மூலம் பெறப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது, எனது மகன் தான் வாங்கினார். மேற்படி இறப்பு சான்றிதழில் இறந்த தேதியாக 05.08.1981 சொல்லப்பட்டுள்ளது ஆனால் இறப்பிற்கான பதிவாக 03.05.2012 என குறிப்பிடப்பட்டுள்ளது எனவே தகுந்த நீதிமன்றத்தின் மூலம் தான் மேற்படி இறப்பு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ 3 இறப்பு சான்றிதழில் சீனிவாச ராவ் அவர்களின் நிலையான முகவரியாக வழக்கு சொத்து தான் காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

10. நெடுஞ்சாலை துறையால் எப்போது சாலைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால் சுமார் 15 ஆண்டுகள் இருக்கும். மேற்படி கையகப்படுத்தப்பட்டதற்கு பணம்

நீதிமன்றத்தில்  வைப்பீடு செய்த பிறகு தான் வழக்குகள் எல்லாம் நடக்கிறது என்றால் சரிதான்.   சாலைக்கு நிலம் எடுத்த பிறகு தான் எனது அம்மா அசல் வழக்கு எண். 246/ 2012 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். எனது அம்மா தாக்கல் செய்து உத்தரவு வாங்கிய வழக்கு 14 ஏக்கர் பூமிக்கு தான் என்றால் சரிதான். அரசாங்கம் 3 ½ ஏக்கர் நிலத்தை எடுத்த பிறகு தான் எனது அம்மா 14 ஏக்கர் பூமிக்கு வழக்கு போட்டார் என்றால் சரிதான். 1981ல் சீனிவாச ராவ் மறைத்த பிறகு 2012ல் எனது அம்மா அசல் வழக்கு எண். 246/2012 தாக்கல் செய்யும் வரை வழக்கு சொத்து எங்களது அனுபவத்தில் இருந்தது என காட்ட ஏதேனும் வருவாய் துறை ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் பட்டா உள்ளது.

11. மேற்படி 1968 செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு நகல் எங்களால் பெறப்பட்டது என்றால் உத்தரவு இருந்ததாக சொன்னார்கள், அந்த உத்தரவு அசல் எங்களிடம் இருந்ததா என்றால் இல்லை. அரசாங்கத்தால் கையக்கப்படுத்தப்பட்ட நிலத்திற்கு எவ்வளவு இழப்பீடு தொகை என்றால் ரூ. 35 லட்சம் இந்த நீதிமன்றத்தில் உள்ளதாக சொன்னார்கள். நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் சீனிவாச ராவ் பெயரில் எந்த உயில் சாசனமும் எழுதப்படவில்லை வழக்கிற்காக நான், எனது தாயார் மற்றும் எனது மகனால் ஜோடிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடந்திருந்தால் எனது அம்மா தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண். 246/2012 இந்த வாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருப்பார், அதை விடுத்து வேண்டும் என்றே வேறு நபர்கள் பெயரில் வழக்கு தாக்கல் செய்து தவறான உத்தரவை பெற்றதே இந்த வழக்கு சொத்தை அபரிக்க வேண்டி தான் என்றால் சரியல்ல.

12. வாதிகள் பெயரில் தான் வழக்கு சொத்திற்கான பாத்தியமும் அனுபவமும் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணத்திலும் சீனிவாச ராவ் அவர்களின் தந்தை பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சீனிவாச ராவ் எங்களுடன் குடியிருந்தார் என காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை எனவே அந்த சங்கதி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்லல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2012 காலத்திற்கு பிறகு ஏற்படுத்தப்பட்டது எனவே அவை வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை எனவே அந்த ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான சொன்னது போல் உயில் ஆவணம் உண்மை ஆவணம் என்றால் வாதிகள் பெயரில் கிரையப்பத்திரம் எழுதப்பட்ட போதே அதை எதிர்த்து வழக்காடி இருப்பேன் என்றால் சரியல்ல. இதுவரை அந்த கிரைய ஆவணங்களை எதிர்த்து தனி வழக்கோ அல்லது இந்த வழக்கில் எதிரிடை பரிகாரமும் கோரவில்லை எனவே அந்த கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் யாதொரு தொடர்பும் இல்லை நான் போலி ஆவணங்களை வைத்து வீண் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.